செ.வெ.எண்: 39 நாள்: 19/01/2013

# சிறந்த காகித ஆலை விருது

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், 2011-12 ஆண்டின் "சிறந்த காகித ஆலை" என்ற உயரிய விருதினை பெற்றுள்ளது. இந்த விருது ஜனவரி 11, 2013 அன்று புது டெல்லியில் இந்திய காகித உற்பத்தி கூட்டமைப்பு (IPMA), நடத்திய விழாவில் வழங்கப்பட்டது.

கடந்த 5 முறைகளில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், சிறந்த காகித ஆலை விருதினை மூன்று முறைகள் பெற்று, இந்திய காகித நிறுவனங்களில், ஒரு முன்னோடியாக திகழ்கிறது.

இந்த விருதை, இந்திய காகித உற்பத்தி கூட்டமைப்பின் சார்பில், பலாபூர் தொழில் நிறுவனத்தின் (BILT) தலைவர், திரு கவுதம் தாபர் அவர்கள், தமிழ்நாடு காகித செய்தித்தாள் காகித நிறுவனத்தின் துணை மேலாண்மை இயக்குநர் திரு அ.வெள்ளியங்கிரி அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அச்சு மற்றும் எழுது காகித உற்பத்தித்திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் ஆகும். இந்நிறுவனம், கரும்பு சக்கையை முக்கிய மூலப் பொருளாகக் கொண்டு காகித உற்பத்தி செய்து வருகிறது. தனது காகித உற்பத்தியில் சுமார் 20 சதவிகிதத்தை, உலகளவில் 30 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9